**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

அ.வ.எண்.137/2024 நாள் : 12.06.2026

வா.சா:–1 சுப்ரமணி ஆஜர், சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி(பிரதிவாதி தரப்பில்):–

நான் என்ன காரணத்திற்காக பார்வதிக்கு பொது அதிகாரம் பெற்ற முகவராக செயல்படுகிறேன் என்ற விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. பார்வதி சாட்சியம் அளிக்க தயாராக உள்ளாரா சாட்சியம் அளிக்கும் நிலையில் உள்ளாரா என்பதனை பொறுத்து எந்தவித ஆவணத்தையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். பார்வதி நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தால் எனது உள்நோக்கம் வெளிப்பட்டுவிடும் என்பதால் அவரை மறைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவருடைய சம்மதத்தின் பேரில் சாட்சியம் அளிக்கிறேனா என்பதே சந்தேகம் அளிக்கிறது என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்றுக்கொள்ள வேண்டி எந்த ஒரு வழக்கும் தனிப்பட்டமுறையில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பார்வதிக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்றால் 3 பெண்கள் மற்றும் 1 மகன் உள்ளார்கள். அவர்கள் அனைவரும் பார்வதியுடன் நேசமான உறவில் உள்ளார்கள் என்றால் சரிதான். அவர்கள் ஏன் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றும், அவர்கள் ஏன் இந்த வழக்கை முன்னின்று நடத்தவில்லை என்ற விளக்கத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வாதியிடம் சொத்தை கிரையம் கேட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பார்வதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்னிட்டு 1,2 பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கறிஞர் பதில் அறிவிப்பில் கண்டுள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். பார்வாதி என்ன அறிவிப்பு பிரதிவாதிகளுக்கு அனுப்பினார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகளுக்குள் நடந்த பிராமிசரி நோட்டு வழக்கு பற்றிய விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிராமிசரி நோட்டில் நடந்த சொத்து ஜப்தி மனு பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது சரிதான். இந்த வழக்கில் தாக்கல்செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் பார்வதியால் தாக்கல்

செய்யப்பட்டவை என்றால் சரிதான். பார்வதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றிய முழு விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த சொத்தின் மதிப்பு எவ்வளவு என்றால் ரூ.32,000/- ஆகும். சொத்தின் மொத்த விஸ்தீரணம் 0.17.0 ஹெக்டேர் அதாவது 42 சென்ட் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.17ன்படியான ஈரோடு மாவட்ட பதிவாளர் அவர்களிடன் விசாரணைக்கு வாதி பார்வதிதான் ஆஜரானார் என்றால் சரிதான். அந்த விசாரணை காலகட்டத்தில் அசல் ஆவண பதிவின்போது அசல் ஆவண சரிபார்ப்பிற்கு மட்டுமே இந்த உத்தரவு பொருந்தும் என்று அசல் ஆவண விளக்கிற்கு மட்டும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உத்தரவின்படி எனக்கு பார்வதி கிரையம் கொடுப்பதாகவோ கிரைய பத்திரம் எழுதி தருவதற்காக அசல் ஆவணத்தில் இருந்து விளக்கு கோரியும் ஏற்கனவே கிரைய பத்திரம் எனக்கு எழுதிகொடுக்கப்பட்டுவிட்டதாகவோ எந்த இடத்திலும் குறிப்பிட்டு விசாரணையில் கூறவில்லை என்றும், அந்த உத்தரவிலும் அதை பரிசீலணை செய்து உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். பற்றுகையின் பேரில் அந்த மனுவின் பேரில் மேல் முறையீடு நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது. வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றி தர வருவாய் துறை எல்லைகளை நீதிமன்றத்தில் பரிகாரம் கோரியிருப்பது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. அதை பொறுத்து சுவாதீன சான்று வழங்கக்கோரி பரிகாரம் கோரியிருப்பதும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சார்பதிவாளர் அலுவலக பதிவுறு சட்டத்தின்படியான ஆவணங்களை பதிவு செய்ய சார்பதிவாளர் அலுவலக எல்லைவரைமுறை இருக்கும்போது அதன்பேரில் மாவட்ட பதிவாளர் அலுவலக தீர்ப்பாயம் மேல்முறையீடு இருக்கும் நிலையில் நீதிமன்றத்தில் நேரடியாக ஆவணங்களை பதிவு செய்ய இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நானோ, வாதியோ தாவா சொத்தை பொறுத்து கிரைய ஆவணத்தை சார் பதிவாளர்அலுவலகத்தில் பதிவு செய்ய சமர்ப்பித்து அதை பதிவு செய்ய மறுத்து எந்த உத்தரவும் சார்பதிவாளர் அலுவலகத்தால் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். ஆவணங்களை பதிவு செய்ய சார் பதிவாளர் மறுத்தற்கான எந்த எழுத்துப்பூர்வமான உத்தரவும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை

என்றால் சரிதான். ஆனால் சம்பந்தப்பட்ட அலுவலகத்தை அணுகாமலேயே நேரடியாக நீதிமன்றத்தை அணுகி வருவாய் தீர்ப்பாய எல்லைகளையும், பதிவுறு சட்டத்தின்படியான எல்லைகளையும் நீதிமன்றத்தில் கோரியிருப்பது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வருவாய் துறையில் கிராம நிர்வாக அலுவலரும் சுவாதீன சான்று கொடுக்கவில்லை என்பதற்காக மேல் முறையீடு வாதி வருவாய் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற கட்டணம் முறையாக மதிப்பிட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாவில் சொல்லியுள்ள வழக்கு மூலம் தவறானது என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு விவரங்கள் பற்றி எதுவும் தெரியாமல் நான் சாட்சியம் அளிப்பது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பார்வதியை விசாரித்து தாவாவின் உண்மை நிலை நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தால்தான் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:– இல்லை

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2026.06.12 13:38:31 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |